**அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2020**

அநுராதபுரம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ஏஆர்/டீபி) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 01 ஆந் திகதிய சீஎல்கே-100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 ஆம் பிரிவு மற்றும் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.4 ஆம் திருத்தப்பட்ட பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையானது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களை கொண்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவர்கள் கருத்தில் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்திச் செயற்திட்டம் (ஏஆர்/டீபி) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பிரதேசங்களிற்கிடையில் களத்தின் கவர்ச்சிக்கு முக்கியமான அதன் கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கும் நோக்குடன் இணைந்த அபிவிருத்தியின் நடுநிலையிலான விதத்தினை மேம்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,779.95 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.4 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,149.96 மில்லியனிற்குச் சமமான யூரோ 52.00 மில்லியன் அபிவிருத்திக்கான பிரான்சு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியல் இடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஏடுகள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்

கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான

குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதிக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளது பௌதிக் செயல்முன்னேற்றம்

அனுராதபுரத்தின் பங்குபற்றுதல் நகர பிராந்திய நடவடிக்கைகளது நகர உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்திட்டத்தால் அமுலாக்கப்படவிருந்தன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உறுப்புரை | நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்பு | தாமதக் காரணங்கள் | முகாமைத்துவக் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| (அ) அனுராதபுர நகரில் நிலைபேறு நகர உட்கட்டமைப்பை இனம் கண்டு கொள்ளல் | விரிவான வடிவமைப்பு ஆய்வினது மதியுரைச் சேவை | i. விரிவான வடிவமைப்பு ஆய்வு மதியுரைச் சேவையை பெறுவதற்கு ரூபா 212.66 மில்லியன் (1.18 இயுரோ மில்லியன்) தொகையிலான உடன்படிக்கையை செயற்திட்டம் மதியுரைக் கம்பனியான SCE, கிறுபிட் - கிறீன் டெக் மதியுரை கூட்டு வியாபாரத்துடன் 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதி செய்திருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம், கம்பனியானது மதியுரை அறிக்கையை 2018 ஒக்டோபர் 12 அன்று சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டு | மதியுரை சேவையின் நலிவான செயலாற்றலும் மேற்பார்வை இல்லாமையும் | மற்றுமோர் மதியுரை குழு வரிசை அமைச்சு செயலாளரால் 2021 மே யில் நியமிக்கப்பட்டிருந்தது. EOT மதிப்பாய்வு செய்யப்பட்டலாதிருந்தது. மதிப்பாய்வின் பின்னர் நட்ட ஈடு தொடர்பான கவனம் மேற்கொள்ளப்படலாம். | நட்டஈட்டை பெறுவதற்கு மதியுரை உடன்படிக்கையை பின்பற்ற வேண்டும். |

இறுதியிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தது. 2020 மார்ச் 20 ஆன்று செயற்திட்டம் ஒப்பந்த காலப்பகுதியைக் நீடித்திருந்தது. 2011 மே வரை வழங்கப்பட வேண்டியவற்றுள் சில முடிவடைதலும் கால நீடிப்பு இல்லாமையாலும் ரூபா 42.11 மில்லியன் கொடுப்பனவு கம்பனிக்கு வழங்கப்பட்டமை கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக அமைந்தது.

மதியுரைக் கம்பனிக்கு செயற்திட்டம் மீளாய்வாண்டில் ரூபா 100.32 மில்லியன் வழங்கிய போதும், நட்ட ஈடான ரூபா 50.24 மில்லியன் அறிக்கையைச்

| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பிக்காதது தொடர்பாக அறவிடப்படவில்லை. | | | |
| ii. விரிவான வடிவமைப்பு மதியுரைச் சேவைக்கான உடன்படிக்கை பிரகாரம் தேவைப்படும் தகைமைகளை 6 மேலதிக வல்லுனர்களும் 2 கொண்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | மதியுரையாளர்களின் நலிவான செயலாற்றலும் மேற்பார்வை இல்லாமையும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நோக்கத்தை அடைவதற்கு சிறந்ததும் வினைத்திறனுடனுமான மேற்பார்வை முறைமை கடைப்பிடிக்கப்பட வேண்டும். |
| iii. விரிவான பொறியியல் வடிவமைப்பு தரப்படுத்தல் உறுப்புரையில் உள்ள நகரப் பிரிவு (கட்டிடக் கலையும் உருவமைப்பும்) தொடர்பான 11 மீளாய்வு அறிக்கைகளைச் | மதியுரையாளர்களின் நலிவான செயலாற்றலும் மேற்பார்வை இல்லாமையும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட நடவடிக்கைகள் மூலம் அதன் நோக்கங்களை அடைவதற்கு சிறந்த வினைத்திறனுடனும் கூடிய ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுலாக்கப்பட வேண்டும். |

சமர்ப்பிப்பதில் 6 மாதங்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்பட்டதால் செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 15 மில்லியன் பயன்படுத்தப்படாதிருந்தது. மீளாய்வு அறிக்கையில் தாமதம் ஏற்படுவதற்கு செயற்திட்ட வல்லுநர் முகாமைத்துவ துணைப் பதவியணியினர் நியமிக்கப்படாமையும் செயற்திட்டப் பதவியினரிடையே நிலவிய வல்லமைத் திறன் இடைவெளியும் பிரதான காரணங்களாக அமைந்தன.

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுரம் புகையிரத நிலைய சுற்றுவட்டம் மற்றும் ''சிங்கக் கம்பம்'' வட்டம் என்பவற்றின் அபிவிருத்திக்கான ஒப்பந்தம் 122.62 மில்லியன் வரையிலான மதிப்பீட்டுக் கிரயத்தில் 2021 யூலை மாதத்தில் நிறைவடைய இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 17.99 மில்லியன் செலவாகியிருந்தது. அத் தினத்தில் உள்ளவாறான பௌதிக செயலாற்றல் 4 சதவீதம் வரையில் குறைவானதாக இருந்தது. தாமதத்திற்கான முக்கிய காரணங்கள் பிரமாண அளவைக் குறிப்பு மற்றும் வரைபடங்கள் என்பன பொருந்திவராமையே ஆகும். செயற்திட்டத்திற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையே முறையான ஒருங்கிணைப்பு இல்லாதிருந்தால் ''சிங்கக் கம்பம்'' தொடர்பான முன்னைய வடிவத்தை மாற்றம் செய்யுமாறு வீதி அபிவிருத்தி சபை செயற்திட்டத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. | கருத்துரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது வடிவமைப்பு மாற்றத்தால் செயற்திட்ட செயல் முன்னேற்றம் தாமதம் ஆகியுள்ளது. | |
| (ஆ) | நான்கு உப செயற்திட்டங்கள் ரூபா 336.25 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்கப்பட்டு 2021 யூலையில் நிறைவடைந்திருந்தன. | கருத்துரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது | வடிவங்களையும் விரிவான திட்டங்களையும் மதிப்பாய்வு செய்ததன் பின்னரே பிரமாண அளவைக் குறிப்பு |

| | | |
|---|---|---|
| எவ்வாறாயினும், 3 செயற்திட்டங்கள் 10 முதல் 30 சதவீதம் வரையிலான குறைவான செயல் முன்னேற்றத்தைக் கொண்டிருந்தன. வடிவங்களிலும் பிரமாண அளவைக் குறிப்பிலும் ஏற்பட்ட வித்தியாசங்களே தாமதத்திற்கு காரணங்கள் ஆகின. மதியரையாளர்களது அடிப்படை ஆவணங்களது மீளாய்வு மதியுரையாளர்களுக்கு அங்கீகாரம் வழங்கியமையும் கணக்காய்வில் சர்ச்சைக்குரியன ஆயின. அந்த வித்தியாசங்களின் காரணமாக வேறுபாடுகளுக்கான அறிக்கைகளைச் சமர்ப்பித்த ஒப்பந்தக்காரர் வேறுபாடுகளின் பொருட்டு மேலதிக கிரயத்தைச் செயற்திட்டத்திடம் கோரியிருந்தன. | | தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 பயன்படுத்தப்படாததும் குறைவாக பயன்படுத்தப்படுவதுமான மூலவளங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, ரூபா 308.84 மில்லியனுக்கு சமமான 1.84 மில்லியன் இயூரோ மாத்திரமே கடன் கொடுத்தார் முகவர் நிலையத்தால் வழங்கப்பட்டு 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்டது. இது பெறப்பட்ட ரூபா 8,354.32 மில்லியனுக்குச் சமமான 52 மில்லியன் இயூரோ ஆகும். செயற்திட்டம் ஆரம்பமாகி 4 ஆண்டுகளின் பின்னர் நிலவிய நிலைமையே இதுவாகும். ரூபா 204.25 மில்லியனுக்குச் சமமான 1.72 மில்லியன் இயூரோ 2018 ஆம் | கருத்துரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | நிதியை ஆக்கபூர்வமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்த சிறந்த, வினைத்திறனுடனான செயற்திட்ட முகாமைத்துவ முறைமை அமுலாக்கப்பட வேண்டும். |

ஆண்டில் செயற்திட்டத்தால் பெறப்பட்டிருந்தது. மேலும் தெரியவந்தது. மீளாய்வாண்டில் முற்பணம் எதுவும் பெறப்படவில்லை மேலும், 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 26.25 மில்லியனுக்குச் சமமான 0.17 மில்லியன் இயூரோ பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்கில் இருந்தது.

## 2.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அநுராதபுரம் உப – செயற்திட்டத்தின் மேலதிக செயற்திட்டப் பணிப்பாளருக்கான கேள்விகள் கோரப்பட்டு வீடு ஒன்று பாவனைக்குப் பெறப்பட்டிருந்தது. 2018 டிசெம்பர் 14 ஆந் திகதி ரூபா 100,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீட்டில் வாடகைக்கு இருக்காததுடன் 2021 ஏப்ரல் வரை முற்பணம் திருப்பிப் பெறப்படாததும் இருந்தது. மேலும், ரூபா 70,000 மாதாந்த வாடகைப்படி மேலதிக செயற்திட்டப் பணிப்பாளருக்கென உடன்படிக்கை மூலம் வீடொன்று பெறப்பட்டு ரூபா 210,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2018 ஒக்டோபர் 08 தொடக்கம் 2019 யூன் 13 வரை ரூபா 520,383 வாடகையாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் சுட்டிக்காட்டப்பட்டவாறு 2020 மே 13 | முற்பணத்தை மீளச் செலுத்தாது வீட்டு உரிமையாளரிடம் கோரிய போதும் அவர் அவ்வாறு செய்யவில்லை. | முற்பணத்தை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திதி 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி வீடு உரிமையாளரிடம் திரும்பவும் வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2021 ஏப்ரல் வரை ரூபா 109,670 முற்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | செயற்திட்டம் 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் ரூபா 96 மில்லியன் மாத்திரமே செயற்திட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடந்த 4 ஆண்டுகளில் செயற்திட்ட முகாமைத்துவக் கிரயமாக ரூபா 183.98 செலவாகியிருந்தது. இது அபிவிருத்தி கிரயத்தின் 50 சதவீதத்திற்குப் அதிகமானதாகும். செயற்திட்டத்தின் உற்பத்தித்திறனும் ஆக்கபூர்வகத் தன்மையும் கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது மதியுரையாளர் தெரிவில் தாமதம் ஏற்பட்டு விரிவாக வடிவமைப்பு உசாத்துணை தாமதம் ஆகியது. | நிதித் திட்டங்களின் படி செயற்திட்ட நிதி செயற்திட்டத்தை நிறைவடையச் செய்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | மதியுரைக் கம்பனியால் முன்மொழியப்பட்ட சந்தைக் கட்டிடம் மற்றும் வாகனத் தரிப்பிடம் ரூபா 877 மில்லியன் செலவினமானது ஆரம்ப கட்டத்தில் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் இழப்பீட்டை வழங்குவதில் உள்ள காரணங்களின் நிமித்தம் இது கைவிடப்பட்டது. முறையான மதிப்பாய்வு இதனைச் செயற்திட்டம் இனம் கண்டிரந்தமை அவதானிக்கப்பட்டது. | கடைசித் தருணத்தில் AFD கடன் வழங்க மறுத்திருந்தது. சந்தை நிர்மாணம் செயற்திட்ட நோக்கெல்லைக்குள் வராது என்பதால் பல மாடிகளைக் கொண்ட தரிப்பிடமும் சந்தையும் அமைவதற்கு பண வசதி மறுக்கப்பட்டது. | திட்டமிடுவதற்கு முன்னர் செயற்திட்ட பாதிப்புகளை கருத்திற் கொண்டு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் |

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

| | ஆளணி | பதவி வெற்றிட எண்ணிக்கை | | வெற்றிட எண்ணிக்கை | முகாமைத்துவ கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரித்தது. | 2020 டிசம்பர் 30 இல் உள்ளவாறு | | | |
| (அ) | நகர மரபுரிமை வல்லுனர் | 01 | - | 01 | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவைக்கு ஏற்ப வெற்றிடம் நிரப்பட வேண்டும். |
| (ஆ) | உதவி செயற்திட்ட பணிப்பாளர் | 03 | - | 03 | | |
| (இ) | மேலதிக செயற்திட்ட பணிப்பாளர் | 01 | | 01 | | |
| (ஈ) | ஏனையோர் | 22 | 18 | 06 | | |

## 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டு ஆகு செலவுடன் ஆரம்பச் செலவினம் ஒப்பிடப்படுகையில் 50 சதவீதமானவிலான வேறுபாடு நிலவியதானது பாதீடு ஆக்கபூர்வமாக அமையாதமையைக் காட்டியது. | மதியுரைத் தாமதத்தால் சேமிப்பு ஏற்பட்டுள்ளது. | ஆக்கபூர்வமாக செயற்திட்ட நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டு நடாத்தப்பட வேண்டும். |